காலிங்கராயன் தடுப்பணையில்

# காலிங்கராயன் உருவச்சிலை

## அமைச்சர் கே.வி.ராமலிங்கம் பேட்டி

ஈரோடு : ஈரோடு பெரியார் வீதியில் உள்ள பெரியார் நினைவு இல்லத்தை தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம், செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி ஆகியோர் பார்வையிட்டனர்.

பின்னர் அமைச்சர் கே.வி.ராமலிங்கம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது :-

காலிங்கராயன் வாய்க்கால் வெட்டிய காலிங்கராயனுக்கு அவருடைய நினைவை போற்றும் வகையில் அவருடைய உருவச்சிலை வைக்க முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். பெரும்பள்ளம் அணையில் விவசாயிகள் இலவசமாக மண்ணை அள்ளிக் கொள்ளலாம். ஆனால் வியாபார நோக்கத்திற்காக மண் அள்ளுபவர்கள் கண்டிப்பாக அரசின் அனுமதி பெற வேண்டும். சென்னிமலையில் உள்ள திருப்பூர் குமரனின் வீட்டை திருப்பூர் குமரன் நினைவு இல்லமாக மாற்ற முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும். இவ்வாறு அமைச்சர் கே.வி.ராமலிங்கம் கூறினார்.